C 8040839

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

1. District : மாவட்டம் திருநெல்வேலி PS: காவல்நிலையம் ஊழல் தடுப்பு மற்றும் கணகாணிப்பு பிரிவு Year: ஆண்டு 2023 FIR No.: மு.த.அ. எண் 09/2023 Date: நாள் 9.11.2023

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 Sections பிரிவுகள்: 7(a) r/w
(ii) Act சட்டம்: Cr.PC Sections பிரிவுகள்: 102 Cr.PC
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 08.11.2023 Date to : நாள் வரை
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 10.00 hrs to Time to.: நேரம் வரை 16 00 hrs
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.11.2023 Time நேரம் 08.30 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் Assistant Executive Engineer office, Rural Development Department, Tirunelveli Sub Division, 4.5 Km North West.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயா District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவா பெயர் செ.கலைமதி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயா திரு.M.இளங்கோ
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் 10.04.1968 Place of Issue : வழங்கப்பட்ட இடம் இந்தியன்
(f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர் (g) Address : முகவரி திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) திரு.D.கௌதமன், உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்டம் 2) திரு.K.பாலசுப்பிரமணியன், இளநிலை வரைவு தொழில் அலுவலர் (Junior Drafting Officer), உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்டம் 3) திரு.S.இசக்கி, வாகன ஓட்டுநர், உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

No delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Not Arise

10. Total value of properties stolen / involved : Not Arise
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: Not Arise
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 09.11.2023ம் தேதி சுமார் 08.30 மணிக்கு காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி D.ராபின் ஞானசிங் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும் போது திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம், துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.செ.கலைமதி அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 08.11.2023-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புனர் செ.கலைமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். பெறுனர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. அய்யா, பொருள்: திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி உட்கோட்டம், ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி உட்கோட்டம், ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள்,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

9/11/23

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09/11/2023 at 09.30hrs

Name: பெயர் D. Robin Gnanasingh
Rank: நிலை Inspector of Police ...No. எண்.........
VKAC, Tirunelveli

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21 3.16(HCL-12)p.2

மானூா், பாளையங்கோட்டை மற்றும் நாங்குநேரி பஞ்சாயத்து யூனியனகளில் நடைபெறும் பணிகளில் பட்டியல்கள் விடுவிப்பது தொடா்பாக ஒப்பந்ததாரா்களிடம் பணம் வசூல் செய்வதாக 08.11.2023-ம் தேதி கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளா் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் போலீஸ் பாா்ட்டி உதவியுடன் மேற்படி திருநெல்வேலி உட்கோட்டம், ஊரக வளர்ச்சித்துறை உதவி செயற்பொறியாளா் அலுவலகத்தில் மாலை 16.00 மணி முதல் 21.00 மணி வரை திடீா் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் இருந்த உதவி செயற்பொறியாளா் திரு.D.கௌதமன் என்பவரிடமிருந்து ரூ.29,500/-ம், இளநிலை வரைவு தொழில் அலுவலா் (Junior Drafting Officer) திரு.K.பாலசுப்பிரமணியன் என்பவரது இருக்கைக்கு வடபுறம் இருந்த மர ரேக்கை சோதனை செய்ய அவர் கைக்கு எட்டும் தூரத்தில கோப்புகளுக்கு மேலே இருந்த ரூ.10,000/-மும், மேற்படி திரு.K.பாலசுப்பிரமணியன் என்பவரது அலுவலக மேஜையின் கீழ் இருந்த Blue Colour குப்பை தொட்டியில் ரூ.2,000/-ம், உதவி செயற்பொறியாளரின் வாகன ஓட்டுநர் திரு.S.இசக்கி என்பவரிடமிருந்து ரூ.3,500/-ம் தனிநபா்களான திரு.யு.மனோகரன் என்பவரிடமிருந்து ரூ.11,500/-ம், திரு.S.ஷேக் அப்துல் காதா் என்பவரிடமிருந்து ரூ.15,000/-ம், திரு.R.சுடலைகண்ணு என்பவரிடமிருந்து ரூ.17,900/-ம் மற்றும் திரு.யு.காளிமுத்து என்பவரிடமிருந்து ரூ.6,400/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.95,800/- கைப்பற்றப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியாா்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்ற பணமாகவும் இருக்கலாம் அல்லது கையூட்டாக கொடுக்க வைத்திருந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடா்பாக செயல்முறை நடவடிக்கை நேற்று (08.11.2023) மாலை 16.00 மணிக்கு ஆரம்பித்து இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த அரசு ஊழியா்களான உதவி செயற்பொறியாளா் திரு.D.கௌதமன், இளநிலை வரைவு தொழில் அலுவலா் (Junior Drafting Officer) திரு.K.பாலசுப்பிரமணியன் மற்றும் உதவி செயற்பொறியாளரின் வாகன ஓட்டுநர் திரு.S.இசக்கி ஆகியோா் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகாருடன் செயல்முறை நடவடிக்கையை இணைத்து தங்களிடம் ஒப்படைக்கிறேன். (செ.கலைமதி) துணை ஆய்வுக்குழு அலுவலா், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். (ஒம். செ.கலைமதி 09.11.2023). Sir, Received the complaint on 09.11.2023 at 08.30 hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.09/2023 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC on 09.11.2023 at 08.30 hrs Sd.D.Robin Gnanasingh, Inspector of Police, V&AC, Tirunelveli dt 09.11.23. Proceedings

பின்வருமாறு:- 08.11.2023-ம் தேதி திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக ளாகத்தின் உள்ளே, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின்புறம், பாளையங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தென்புறம் அமைந்துள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருநெல்வேலி அலுவலகத்தின் பிரதான வாயிலின் தென்புறம் கிழக்கு பார்த்து அமைந்துள்ள உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்டம் அலுவலகத்தை திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம் துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.செ.கலைமதி அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை :1) திருமதி.செ.கலைமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். 2) திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 08.11.2023-ம் தேதி திருநெலவேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் உள்ளே அமைந்துள்ள திருநெல்வேலி உட்கோட்ட ஊரக வளர்ச்சித்துறை, உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள மானூர், பாளையங்கோட்டை மற்றும் நாங்குநேரி பஞ்சாயத்து யூனியன்களில் நடைபெறும் பணிகளில் பட்டியல்கள் விடுவிப்பது தொடர்பாக ஒப்பந்ததாரர்களிடம் பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திருமதி.செ.கலைமதி அவர்கள் மற்றும் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 15.30 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489 மற்றும் இருசக்கர வாகனங்களில் புறப்பட்டு வண்ணாரப்பேட்டை, மாவட்ட அறிவியல் மையம் வழியாக வந்து சுமார் 16.00 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் பின்புறம், பாளையங்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்திற்கு தென்புறம் அமைந்துள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருநெல்வேலி அலுவலகத்தின் உள்ளே பிரதான வாயிலின் தென்புறம் கிழக்கு பார்த்து அமைந்துள்ள ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்ட உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தின் உள்ளே வந்ததும், வராண்டாவில் நின்று கொண்டிருந்த பின்னால பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உதவி செயற்பொறியாளரின் வாகன ஓட்டுநர் திரு.S.இசக்கி என்பவரை அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.3,500/- ஐ (500x7=3,500/-) தனது பேன்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்தார்.

மேற்படி பணம் குறித்து திரு.S.இசக்கியிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.3,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி வராண்டாவின் மேற்கு பககம் கிழக்கு பார்த்து வாசல் கொண்ட அறையில் வடக்கு பார்த்து இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.D.கௌதமன், உதவி செயற்பொறியாளர், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்டம் என்பவரிடம் அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து இரண்டு காக்கி நிற கவர்களை ஆஜர் செய்தார். அதில் முதல் கவரில் ரூ.5,000/-மும் (500x10=5,000/-) மற்றொரு கவரில் இரண்டு பணக்கத்தைகளாக ரூ.21,500/-ம் (500x43=21,500/-), ரூ.3,000/-மும் (200x13 + 100x4 = 3,000/-) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.D.கௌதமனிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.29,500/-மும் 2 கவரோடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அதுசமயம் மேற்படி உதவி செயற்பொறியாளரை பார்ப்பதற்காக அவரது அறைக்கு வந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஒப்பந்ததாரர் திரு.A.மனோகரன் என்பவரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணகத்தையாக ரூ.11,500/-ஐ (500x23=11,500/-) ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திரு.A.மனோகரனிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால், அவரது ஒப்பந்த பணிக்கான பணிபட்டியலை விடுவிக்க வேண்டி மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டி கொண்டு வந்திருக்க வாய்ப்பு உள்ளதால், மேற்படி பணம் ரூ.11,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி திரு.A.மனோகரன் என்பவர் கொண்டு வைத்திருந்த பையை சோதனை செய்த போது அதில் சிறியதும் பெரியதுமாக ஆறு இனிப்பு பெட்டிகள் (Sweet Box) இருந்தது. அது குறித்து மேற்படி திரு.A.மனோகரனிடம் கேட்க, அவை உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்டம் அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு தீபாவளியை முன்னிட்டு அன்பளிப்பாக கொடுக்க கொண்டு வந்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி இனிப்பு பெட்டிகள் விரைவில் அழியக்கூடியது என்பதால் அவை இந்த செயல்முறை நடவடிக்கையில் பதிவு செய்யப்பட்டு மேற்படி அலுவலகத்திலேயே விடப்பட்டது.

மேற்படி வராண்டாவில் இருந்து வடக்கு பார்த்து உள்ள வாசல் வழியாக உள்ளே நுழைந்ததும் கிழக்கு பார்த்து இருக்கை போட்டு அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட இளநிலை வரைவு தொழில் அலுவலர் (Junior Drafting Officer) திரு.K.பாலசுப்பிரமணியன் என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பேண்டு பாக்கெட்டில் மணிபர்சில் வைத்திருந்த ரூ.340/- எடுத்து

ஆஜர் செய்தார். அது தனது சொந்தப்பணம் என்று கூறினார். மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது முன்பு இருந்த அலுவலக மேஜையின் கீழ இருந்த Blue Color குப்பை தொட்டியை சோதனை செய்ய அதில் பணக்கத்தையாக ரூ.2,000/-ம் (500x3 + 200x2 + 100x1=2,000/-) இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.K.பாலசுப்பிரமணியன் என்பவரிடம் கேட்க அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.2,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி இளநிலை வரைவு தொழில் அலுவலர் இருக்கைக்கு வடபுறம் இருந்த மர ரேக்கை சோதனை செய்ய அவர் கைக்கு எட்டும் தூரத்தில் கோப்புகளுக்கு மேலே ரூ.10,000/- (500x20=10,000/-) வெள்ளை பேப்பரில் சுற்றி இருந்தது. மேற்படி பணம் குறித்து திரு.K.பாலசுப்பிரமணியன் என்பவரிடம் கேட்க அவர் தகுந்த முகாந்திரம் கூறாதபடியால் மேற்படி பணம் ரூ.10,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இளநிலை வரைவு தொழில் அலுவலர் இருக்கைக்கு எதிரே மேற்கு பார்த்து போடப்பட்டிருந்த இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.S.மகேஷ் என்ற தனிநபரை விசாரிக்க அவர் மேற்படி இளநிலை வரைவு தொழில் அலுவலர் திரு.K.பாலசுப்பிரமணியன் அவர்கள் தன்னை மாத ஊதியம் ரூ.8,000/-றகு பணி அமர்த்தியிருப்பதாகவும் கடந்த ஒரு வருடமாக மேற்படி அலுவலகத்தில் கணனி இயக்குபவராக பணிபுரிவதாக கூறினார். மேற்படி திருமதி.S.மகேஷ் என்பவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது கைப்பையில் இருந்து ரூ.60/-ஐ ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திருமதி.S.மகேஷ் என்பவரிடம் கேட்டபோது மேற்படி பணத்தை பேருந்து செலவிற்காக வைத்திருப்பதாகவும், அது தனது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.60/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேலும் திருமதி.S.மகேஷ் இருக்கைக்கு அருகில் இளநிலை வரைவு தொழில் அலுவலர் திரு.K.பாலசுப்பிரமணியனை பார்த்து நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட தென்கலம் கிராம பஞ்சாயத்து தலைவர் திரு.S.ஷேக் அப்துல் காதர் என்பவரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்து பணகத்தையாக ரூ.15,000/-ஐ (500x28 + 100x10=15,000/-) ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திரு.S.ஷேக் அப்துல் காதரிடம் கேட்டபோது அவர் திரு.அப்துல் வாகித் என்பவரின் ஒப்பந்த பணி தொடர்பாக M.Book, Bill-களை அலுவலகத்தில் ஒப்படைத்து அவர் பணி சம்பந்தமாக விபரம் கூற வந்ததாக சொல்லி மேற்படி பணம் குறித்து சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.15,000/- மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு மேற்படி திரு.S.அப்துல் வாகித் என்பவரின் ஒப்பந்த பணி சம்பந்தமாக லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டி கொண்டு வந்திருக்க வாய்ப்பு உள்ளதால், மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

அதுசமயம் மேற்படி வரைவு தொழில் அலுவலரை பார்ப்பதற்காக அவரது அறைக்கு வந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஒப்பந்ததாரர் திரு.R.சுடலைக்கண்ணு என்பவரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து பணகத்தையாக ரூ.17,900/-ஐ (500x35 + 100x4=17,900/-) ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திரு.R.சுடலைக்கண்ணுவிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.17,900/- அவரது ஒப்பந்த பணிக்கான பணிபட்டியலை விடுவிக்க வேண்டி மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டி கொண்டு வந்திருக்க வாய்ப்பு உள்ளதால், மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி இளநிலை வரைவு தொழில் அலுவலர் அறையில் மேற்கு பார்த்து உள்ள வாசல் வழியாக உள்ளே நுழைந்ததும் கிழக்கு பார்த்து இருக்கை போட்டு அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட உதவி பொறியாளர் (Assistant Engineer) செல்வி.M.முத்துமீனாள் என்பவரிடம் அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கைப்பையில் வைத்திருந்த ரூ.20/-ஐ எடுத்து ஆஜர் செய்தார். அது தனது சொந்தப்பணம் என்று கூறினார். மேற்படி பணம் ரூ.20/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவரது இருக்கைக்கு அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட ஒப்பந்ததாரர் திரு.A.காளிமுத்து என்பவரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது சட்டை பாக்கெட்டில் இருந்து பணகத்தையாக ரூ.6,400/-ஐ (500x12 + 100x4=6,400/-) ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திரு.A.காளிமுத்துவிடம் கேட்டபோது சரியான முகாந்திரம் சொல்லாததால் மேற்படி பணம் ரூ.6,400/- அவரது ஒப்பந்த பணிக்கான பணிபட்டியலை விடுவிக்க வேண்டி மேற்படி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக பணம் கொடுக்க வேண்டி கொண்டு வந்திருக்க வாய்ப்பு உள்ளதால், மேற்படி பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேற்படி உதவி செயற்பொறியாளர் திரு.D.கௌதமனிடம் மேற்படி அலுவலக வருகை பதிவேட்டை ஆஜர் செய்ய கேட்க அவர் இளநிலை வரைவு தொழில் அலுவலர் திரு.K.பாலசுப்பிரமணியனிடம் இருந்து உதவி செயற்பொறியாளர் அலுவலகம், ஊரக வளர்ச்சித்துறை, திருநெல்வேலி உட்கோட்ட அலுவலக வருகைபதிவேடு 2023-ஐ வாங்கி ஆஜர் செய்தார். மேற்படி பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் மேற்படி அலுவலகத்தில் நிரந்தர முன்பண இருப்பு பதிவேடு மற்றும் ரொக்க பதிவேடு பராமரிக்கப்படவில்லை என்றும், அரசு பணம் ஏதும் இருப்பு இல்லை என்றும் கூறினார்.

மேற்படி ஊரக வளர்ச்சித்துறை செயற்பொறியாளர் அலுவலகம் இயங்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருநெல்வேலி கட்டிடத்தின் முதல் தளத்திற்கு சென்று தெற்கு பார்த்து வாசல் அமைந்துள்ள செயற்பொறியாளர், ஊரக

வளர்ச்சித்துறை, திருநெல்வேலி அலுவலகத்தின உள்ளே சென்று முதலில் இருக்கும் உதவி பொறியாளா அறையில் அங்கு வாசல் அருகில் நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட செயற்பொறியாளரின் வாகன ஓட்டுநர் திரு.V.முத்து என்பவரை அவரிடமிருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவர் தன்னிடமிருந்த ரூ.300/-ஐ தனது பேண்ட் பாக்கெட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்து அது தனது சொந்த பணம் என கூறியதால் மேற்படி பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அறையின் கிழக்கு பக்கம் தெற்கு பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.S.விஜயஜானகி என்ற தொகுப்பூதிய கணினி இயக்குநரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது கைப்பையில் இருந்து ரூ.250/-ஐ ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து திருமதி.S.விஜயஜானகி என்பவரிடம் கேட்டபோது மேற்படி பணம் தனது சொந்த பணம் என்று கூறியதால் மேற்படி பணம் ரூ.250/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அறையில் தெற்கு பார்த்து தனது இருக்கையில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.I.பாண்டி மாடசாமி ஆழ்வார், உதவி பொறியாளரை அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய கேட்க அவரது பேண்ட் பாக்கெட்டில் இருந்த பர்ஸ்சில் இருந்து ரூ.3,500/-ஐ ஆஜர் செய்து அது இன்று (08.11.2023) தேதி தனது வங்கி கணக்கில் இருந்து ATM-ல் தான் எடுத்ததற்கான தனது செல்போனிற்கு வந்த குறுச்செய்தியை காண்பித்தார். அது சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.3,500/- அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அறையின் மேற்கு பக்கம் உள்ள வாசல் வழியாக உள்ள செயற்பொறியாளர் அறையினை பார்க்க அறையில் எவரும் இல்லை. பின்னர் மீண்டும் உதவி செயற்பொறியாளர் அலுவலகம் வந்து மேற்படி விபரங்களுக்கு இந்த திடீர் சோதனை குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கைகள் இன்று (08.11.2023) இரவு 21.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். செ.கலைமதி, துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள் (இருப்பு) திருநெல்வேலி மாவட்டம். ஒம் மற்றும் சிலர்.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli, Tenkasi, Thoothukudi and Kanyakumari Districts @ Tirunelveli District and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

9/11/2023
D Robin Gnana Singh
Insp. to Addl. VAC, Tirunelveli